<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 27.01.2026

அசல் வழக்கு எண். 188/2013

பி.சா.1 – சத்தியமூர்த்தி, த/பெ. நடராஜன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கு சொத்தின் கிரைய பத்திரத்தின் நகல் பார்த்தீர்களா என்றால் பார்த்தது கிடையாது. வாதி ஜேம்ஸ் பிடரிக் என்பவர் உங்களுக்கு ஏதேனும் ஆவணம் எழுதி கொடுத்தாரா என்றால் எனக்கு எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை. நீங்கள் பங்குதாரராக இருக்கிற ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்திற்கு வாதி ஏதேனும் ஆவணம் எழுதிக் கொடுத்தாரா என்றால் நிறுவனம் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக இல்லை. ஆனால் உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்திற்கு அனுபவத்தில் உள்ளது என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் இந்த வழக்கு சம்பந்தமாக மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் ஓ.ஏ.வழக்கு எண்.177, 178 என்கிற வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்திற்கு சுவாதீனத்தில் இருக்கிறது என்று போடப்பட்டுள்ளது. வாதி ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்திற்கு ஏதேனும் ஆவணம் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் ஞாபகம் இல்லை. ஓ.ஏ.வழக்கு எண்.177, 178 என்கிற வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்திற்கு சுவாதீனத்தில் இருக்கிறது என்று அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியில்லை. ஈஸ்ட் வெஸ்ட் ரிசார்ட் நிறுவனத்தின் நிலம் சர்வே நம்பர் 1487/1பி1, 2 ஏக்கர் நிலத்தில் தான் ஈஸ்ட் வெஸ்ட் ரிசார்ட் சம்பந்தமான வியாபாரம் நடக்கிறது என்றால் சரியில்லை. வழக்கு சொத்தில் ஈஸ்ட் வேஸ்ட்

நிறுவன ரிசார்ட் வியாபாரம் நடைபெறவில்லை என்றால் சரியில்லை. ஓ.ஏ.வழக்கு எண்.177, 178 என்ற வழக்கில் வழக்கு சொத்து குறித்து எந்த உத்தரவும் உங்களுக்கு சாதகமாக பிறப்பிக்க வில்லை என்றால் சரியில்லை. அந்த வழக்கில் வாதி ஜேம்ஸ் பிடரிக் என்பவருக்கு சொந்தமானது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியில்லை. பட்டா, சிட்டா ஆகியவை வாதியின் பெயரில் இருக்கிறது என்றால் சரியில்லை. இது நாள் வரை அவர் பெயரில் தான் இருந்து வருகிறது நீங்கள் வழக்குக்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. வழக்கு சொத்து அனுபவத்தில் இருப்பதாக சொல்கிறீர்கள் அவ்வாறு ஏதேனும் ஆவணம் உங்களிடம் இருக்கிறதா என்றால் ஆவணம் எதுவும் இல்லை வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மட்டுமே உள்ளது. அரசு நிலத்தை ஆர்ஜிதம் செய்த பிறகு வாதியே மீதி இடத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியில்லை. ஆர்ஜிதம் செய்தது போக மீதி இருந்த இடத்தில் வாதி சுற்று சுவர் எழுப்பி ஆண்டு அனுபவித்து வந்தார் நீங்கள் வேண்டுமென்று அந்த சுற்றுச்சுவரினை இடித்ததால் உங்கள் மீது திருப்பெரும்புதூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரியில்லை. நாங்கள் தான் வாதி மீது புகார் கொடுத்தோம் அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. வழக்கு சொத்திற்கும் புகாருக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரி இல்லை. நீங்கள் கூறியுள்ள ஓ.ஏ.வழக்கு எண்.177, 178 என்ற வழக்கிற்கும் இந்த அசல் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிவில்லை. இந்த வழக்கில் சுவாதீனம்

**குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. ஆகவே வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கது என்றால் சரியில்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.